மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : தலைவர் அவர்களே, ஐந்தாவது நிதிக் கமிஷனிடம் மட்டுமல்ல; வழக்கமாக எல்லாக் கமிஷன்களிலும் இந்த அரசு வற்புறுத்திவருகிறது. ஒரு அடிப்படை அம்சத்தைச் சொல்ல விரும்புகிறேன். பஞ்சப்படியை அடிப்படை சம்பளத்துடன், விலைவாசி உயர்வுக்காக சேர்க்கப்பட்டது. அகவிலைப்படியைக் குறைக்க வேண்டுமென்பது அரசாங்கத்தின் குறிக்கோளாக இருக்க வேண்டுமே தவிர, இதை அடிப்படைச் சம்பளத்துடன் இணைத்துவிடுவதால் மட்டும் சரியான பரிகாரம் ஏற்பட்டுவிடாது.

திரு. கே. விநாயகம் : பேரவைத் தலைவர் அவர்களே, சம்பளத்துடன் பஞ்சப்படியைச் சேர்ப்பதனாலே அதிகத் தொகை இப்போது ஆகிறது என்றிருந்தாலும், அவர்கள் ஓய்வு பெற்ற நேரத்திலே இதன் விளைவாக பென்ஷன் தொகையை அதிகமாகத் தர வேண்டுமென்ற ஐயப்பாடு அரசுக்கு இருக்கிறதா? அந்த ஐயப்பாட்டை மனதில் வைத்துக்கொண்டுதான் அரசாங்கம் முடியாது என்று சொல்கிறதா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன். தலைவர் அவர்களே, பரிசீலனை செய்கிறது என்றால் முடியும் என்றும் பொருள் அல்ல, முடியாது என்றும் பொருள் அல்ல. அதற்கான காரணகாரியங்களை ஆராய்கிறது என்பதுதான் பொருள். பென்ஷன் தொகை அதிகமாகிறது என்பதனால் கொடுக்கக்கூடாது என்பதல்ல. சில இடங்களில் கெடுதல்களும் இருக்கின்றன. நம்முடைய அரசாங்க ஊழியர்கள் சங்கமே கூட பஞ்சப்படியில் ஒரு பகுதியைத்தான் சேர்க்க வேண்டுமென்று கேட்கிறது. இவையெல்லாம் விரிவாக ஆராயப்பட வேண்டுமே தவிர, அவசரமாகச் செய்வதற்கில்லை. ஆராய்ச்சி முடிவதற்கு முன்னாலே எதுவும் சொல்வதற்கில்லை.

Supply of wheat to Tiruchirappalli town.

* 341 *Q.*—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state :—

(*a*) whether it is a fact that wheat was not supplied to wheat consumers (North Indians) in the Tiruchirappalli town during the month of August 1967; and

(*b*) if so, the steps taken to ensure regular supply of wheat to Tiruchirappalli?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : (அ) இல்லை, கோதுமை சாப்பிடுபவர்களுக்கு கோதுமை வழங்கப்பட்டது.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு கே. விநாயகம் : பேரவைத் தலைவர் அவர்களே, கோதுமை சாப்பிடுபவர்கள் வட இந்தியர்கள். அவர்களுக்குக் கோதுமை தரப்படும் என்பது தெரியும். 1967 ஆகஸ்ட் மாதத்தில் தட்டுப்பாடு ஏற்பட்டதன் விளைவாக அவர்களுக்குக் கோதுமை கிடைக்கவில்லையென்று மகஜர்களை அரசாங்கத்திற்கும், கலெக்டர் அவர்களுக்கும் கொடுத்தது தெரியுமா? பின்னால் அதை எப்படி சமாளித்தார்கள்?

மாண்புமிகு திரு ஏ. கோவிந்தசாமி : தலைவர் அவர்களே, 1967 ஆகஸ்ட் மாதத்திலே 402 குவின்டால் அளவுள்ள கோதுமை திருச்சி நகரிலே வழங்கப்பட்டிருக்கிறது. திருச்சி நகரில் 218 நியாயவிலைக் கடைகள் இருக்கின்றன. ஒவ்வொரு கடைக்கும் இரண்டு மூட்டை கோதுமை என்ற வீதத்தில் வழங்கப்பட்டிருக்கிறது.

Dr. H. V. HANDE : Sir, what is the basis on which wheat is distributed to different towns? Has the Government got as much wheat as it wanted during 1968 and 1969 and is the Government aware of the fact that even in Madras City, especially in my constituency, Sowcarpet, a number of times people suffered from shortage of wheat and they complained also. In view of this will the Government tell us the method of distribution of wheat to Madras City and the various towns?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : தலைவர் அவர்களே, அங்கத்தினர் அவர்கள் தனிக் கேள்வி கேட்டால் விவரம் சேகரித்துத் தரப்படும். கோதுமை கிடைக்காத குறைபாடு எங்கும் இல்லை. அங்கத்தினர் அவர்களுடைய தொகுதியில் குறைபாடு இருந்தாலும் அதை சர்க்காருடைய கவனத்திற்குக் கொண்டுவந்தால், குறைபாடு நீக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. சகாதேவக் கண்டர் : பேரவைத் தலைவர் அவர்களே, யூனியன் மூலமாகவும், பஞ்சாயத்து மூலமாகவும் கட்டாயப்படுத்தி கோதுமை வழங்கப்படுகிறதே, அது எந்த நோக்கத்தின் அடிப்படையில் வழங்கப்படுகிறது?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : தலைவர் அவர்களே, வட ஆர்க்காடு மாவட்டத்தில் பஞ்ச நிலைமை ஏற்பட்ட காரணத்தினால், அந்தப் பகுதி மக்கள் பட்டினியால் வாடக்கூடாது என்பதற்காக கோதுமையாவது கொடுத்ததற்கு கனம் அங்கத்தினர் அவர்கள் நன்றி தெரிவிப்பார்கள் என்று நினைக்கிறேன்.

Commissioner of Civil Supplies Office

* 342 *Q.*—Thiru N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state—

(*a*) whether there is any classification of Government servants into Superior and Inferior staff in the Office of the Commissioner of Civil Supplies, Accounts Wing; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திருப்பூர் கூட்டுறவு பால் வழங்கும் சங்கம்

* **343 வினா : திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு உணவு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா ?

சென்னிமலை பிர்க்கா காட்டில் (Forest) 50 ஏக்கர் நிலம் திருப்பூர் கூட்டுறவு பால் பண்ணைக்கு ஏலத்தில் விடப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : சென்னிமலையில் 50 ஏக்கர் நிலத்திலிருந்து புல் வெட்டி அகற்றும் உரிமை திருப்பூர் கூட்டுறவுப் பால் வழங்கு சங்கத்துக்கு 1966-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 1-ம் தேதி முதல் 1969-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30-ம் தேதி வரையில் மூன்றாண்டுகட்கு ஏக்கர் ஒன்றுக்கு ஓராண்டிற்கு ரூ. 5 வீதம் குத்தகைக்கு விடப்பட்டுள்ளது.